மேலுள்ள அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள, வர்த்தக வங்கிகள், மகாவங்கி முதலியனவற்றில் இருந்த அரசாங்கப்பத்திரங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு மகா வங்கி அரசாங்கத்திற்கு கொடுத்த முற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, அரசாங்க பண மீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி முதலியவைகளிலிருந்து மேற்கூறிய வற்றைக் காணக்கூடியதாக இருந்தது. 1959ம் ஆண்டு வர்த்தக வங்கிகளின் இறைசேரி உண்டியல்கள் அரசாங்கப் பிணைகள், அரசாங்க உத்தரவாதப் பிணை கள் முதலியவற்றின் உடமைகளில் ஏற்பட்ட 302 இலட்சம் ரூபாய்களின் உயர்ச்சி யுடன் ஒப்பிடுகையில், 1960ம் ஆண்டு இவை 60 இலட்சம் ரூபாய்களால் உயர்ச்சி யடைந்தது. 1959ம் ஆண்டு மகாவங்கி அரசாங்கத்திற்கு கொடுத்த முற்பணங் கள் 618 இலட்சம் ரூபாய்களால் உயர 1960ம் ஆண்டு இவை 219 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. மறுபக்கத்தில் முந்தைய ஆண்டில் 1910 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்த மகாவங்கியின் அரசாங்கப் பிணைகள், இறைசேரி உண்டி யல் உடமைகள் 1960ம் ஆண்டு 2243 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. 1959ம் ஆண்டில் 640 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைந்த அரசாங்கத்தின் கையிருப்பு ரூபாப்பணம், 1960ம் ஆண்டில் 80 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சி யடைந்தது. 1959ம் ஆண்டில், அரசாங்கத்தின் நிதி இயக்கங்களின் பயனைத் தோன்றிய நிகரப்பணவிரிவாகிய 3470 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், 1960ம் ஆண்டில் இது 2602 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1960ம் ஆண்டில் தனிப்பட்டோர் துறைக்கு கொடுக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் கொடுகடனும் பணவிரிவுக்கு ஒரு குறிப் பிடத்தக்க காரணமகே விளங்கியது. இவ்வாறு, 1959ம் ஆண்டில் 97 இலட்சம் ரூபாய்களால் மட்டும் உயர்ந்த வங்கிக் கொடுகடன் 1960ம் ஆண்டில் 315 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது.

பாதகமான சென்மதி நிலுவை பண நிரம்பலிற் சுருக்கத்தைக் கொண்டுவரு கின்றமையால், வரவு செலவுத்திட்டக்குறை, தனிப்பட்டோருக்கு கொடுக்கப் பட்ட வங்கிக்கடன் முதலியன பண நிரம்பலில் கொண்டுவரக்கூடிய முழு விரிவை யும் விளைவிக்கவில்லை. இஃது வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற் பட்ட வீழ்ச்சியில் பிரதிபலிக்கப்படுகின்றது. 1959ம் ஆண்டில் 1950 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைந்த வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 1960ம் ஆண்டில் 1702 இலட்சம் ரூமாய்களால் வீழ்ச்சியடைந்தன. மேலும், நிலையான வைப்புக்களும் சேமிப்பு வைப்புக்களும், ஏனைய பொறுப்புகளும் 725 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. ஆயினும் விரிவுக்குப் பொறுப்பாகும் காரணங்க ளின் பயனை ஓரளவுக்கு தணிக்கும் வகையிற் தான் சுருக்கத்திற்குப் பொறுப்பா கும் காரணிகள் அமைந்தமையால் பண நிரம்பல் அதிகரித்தது. முந்தைய ஆண் டுடன் ஒப்பிடுகையில், 1960ம் ஆண்டில் பணநிரம்பலின் குறைந்த வளர்ச்சிக்கு, பண நிரம்பலுக்கு அரசாங்கம் உதவிய பங்கின் அளவு வீழ்ச்சியடைந்தமை ஓரளவு காரணமாகும். இதற்கு நிலையான வைப்புக்கள் அதிகரித்தமையும் வேறொரு காரணமாகும். இந்த அதிகரிப்பு இவ்வைப்புக்களின் மேல் 1960ம் ஆண்டின் முற்பகுதியில் வர்த்தக வங்கிகளாற் கொடுக்கப்பட்ட வட்டி வீதங்கள் அதிகரித்தமைப் பிரதிபலிக்கின்றது. இவ்விபரம் பின்னர் இந்த அறிக்கையில் காட்டப்படும்.

## (உ) வங்கித்தொழிலும், கொடுகடனும்.

### (1) மகாவங்கி

சென்மதி நிலுவை நிலமை மேலும் சீர்கேடடைந்ததைப் பிரதிபலித்து, 1960ம் ஆண்டு மகாவங்கியின் சர்வதேச ஒதுக்கு நிதி 1965 இலட்சம் ரூபாய்க ளால் அல்லது 50.8 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. 1959ம் ஆண்டு இஃது 1520 இலட்சம் ரூபாய்களால் அல்லது 28.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. வரவு செலவுதிட்டக்குறையை நிவர்த்திப்பதற்கு நிதி ஈட்டுவதற்காக மகாவங்கி அரசாங்கத்துடன் கொண்டிருந்த கொடுகடன் இயக்கங்களின் பிரதான பயனை வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள், கணிசமாக அதிகரித்தது. அரசாங்கத் திற்கு மகாவங்கி வழங்கிய முற்பணங்கள் 1913 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந் தன. 1959ம் ஆண்டு 619 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்த இம்முற்பணங்க ளுடன் ஒப்பிடுகையில் 1960ம் ஆண்டில் ஏற்பட்ட மேற்கூறிய உயர்ச்சி 219 இலட்சம் ரூபாய்களைக் கெகண்டதாகும். 1959ம் ஆண்டில், 1910 இலட்சம்

ரூபாய்களால் உயர்ந்த மகாவங்கியின் இறைசேறி உண்டியல் உடமைகளுடன் ஒப்பிடுகையில், 1960ம் ஆண்டு இவை 2243 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்தன. வர்த்தக வங்கிகளும், அவைகளின் தாழ்ந்த ஒதுக்குநிதி நிலைமை காரணமாக மகாவங்கியின் உதவியை, குறிப்பாக ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், நாட வேண்டியிருந்தது. ஆகவே மகாவங்கி வர்த்தக வங்கிகளுக்கு வழங்கிய முற் பணங்கள் 210 இலட்சம் ரூபாய்களால் இவ்வாண்டு உயர்ந்தன. ஏனைய சில சொத்துக்களும் 463 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைந்தமையினுல், மொத்தச் சொத்துக்கள் 246 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன.

முந்தைய ஆண்டிலும் பார்க்க 1960ம் ஆண்டில் மகாவங்கியின் நாணய வெளியீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு குறைந்ததாகவே காணப்பட்டது. 1959ம் ஆண்டு, 430 இலட்சம் ரூபாய்களால் அல்லது 7.4 சதவீதத்தால், அதிகரித்த மொத்த நாணய வெளியீடுகளுடன் ஒப்பிடுகையில், 1960ம் ஆண்டு இவை 233 இலட்சம் ரூபாய்களால், அல்லது 3.7 சதவீதத்தால் உயர்ந்தன. 1959ம் ஆண்டில் வர்த்தக வங்கிகள் மகாவங்கியில் வைத்த வைப்புக்களில் ஏற்பட்ட 39 இலட்சம் ரூபாய்கள் அதிகரிப்புக்கு எதிராக, 1960ம் ஆண்டில் இவை 449 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இவ்வதிகரிப்பு ஆண்டின் பிற்சில மாதங் களில் ஏற்பட்டது. இஃது வர்த்தக வங்கிகளின் திரவச் சொத்துக்களின் நிலை மையில் இவ்வாண்டில் ஏற்பட்ட சீர்த்திருத்தத்தை பிரதிபலிக்கின்றது. சர்வ தேசதாபனங்களின் வைப்புக்களும், ஏனைய பொறுப்புக்களும் முறையே 151 இலட்சம் ரூபாய்களாலும், 326 இலட்சம் ரூபாய்களாலும் வீழ்ச்சியடைந்தன. மொத்தப் பணத்தொகையிலும் கேள்வி பொறுப்புகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பு, சர்வதேச ஒதுக்குநிதியில் ஏற்பட்ட வீழ்ச்சி, முதலியனவை காரணமாக 1959ம் ஆண்டு முடிவில் 48.2 சதவீதமாக விளங்கிய பணத்தொகை, கேள்விப் பொறுப் புகள் முதலியவற்றின் மொத்தத்தில் சர்வதேச ஒதுக்குநிதியின் விகிதம் 1960ம் ஆண்டு முடிவில் மேலும் 22.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதுகாறும் விளங்கிய மட்டங்களிலும் பார்க்க இம்மட்டம் மிகத் தாழ்ந்தது ஆகும்.

(2) கொடுகடன்கொள்கை.

1960ம் ஆண்டில் மகாவங்கியை எதிர்நோக்கிய முக்கிய பிரச்சனை, நாட்டி னது வெளிநாட்டுச் சொத்துக்களின் விரைவான வீழ்ச்சியாகும். வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சியைத் தடுக்கும்பொருட்டு வர்த்தக வங்கிக்கொடுகடனை மட்டுப்படுத்துவதற்கு மகாவங்கி பல நாணய சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. வங்கிக் கொடுகடனை மட்டுப் படுத்துவதையும் சில போகப் பொருட்கள், ஓரளவு போகப் பொருட்கள் முதலி யனவற்றை கொள்வனவு செய்வதற்காகவும், இறக்குமதி செய்வதற்காகவும் வழங்கப்படும் கொடுகடனின் பேரில் உள்ள வட்டி போன்ற கட்டணங்களை அதிக ரிக்கச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு, இந்நடவடிக்கைகள் பெரும்பா லும் தேர்ந்தெடுக்கப்பட்டன. இன்றியமையாத வர்த்தக தேவைகளுக்கும், உற்பத்தித் தேவைகளுக்கும் நியாயமான நிபந்தனைகளின் பேரில் கொடுகடன் வசதிகள் கிடைக்கும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

1960ம் ஆண்டு, ஆவணி மாதம் 13ம் திகதி தொடக்கம் வர்த்தக வங்கிகள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு செயலாற்றும்படி கேட்டுக்கொள்ளப்பட் டன :—

(அ) சில பொருட்களை இறக்குமதி செய்வதற்கு, நாணயகடிதங்களுக்கெதி ராக 50 சதவீதத்தை பண ரூபத்தில் கொடுக்கும்படி வற்புறுத்தல். இப்பணத்தைக் கொடுப்பதற்காக வங்கிகள் முற்பணங்கள் வழங்க்க கூடாதெனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. கூடிய பயனை இந் நிபந்தனை அளிக்கும்படி செய்வதற்காக, மேற்கூறிய சில பொருட்களை நாணயக் கடிதங்கள் மூலமாகத்தான் இறக்குமதி செய்யும்படி இறக்கு மதியாளர்களுக்கு நிபந்தனை விதிக்கப்பட்டது.

(ஆ) 1960ம் ஆண்டு ஆவணி மாதம் 12ம் திகதியில் உள்ளபடி கொடுக்கப் பட்ட தொகைக்கு மேலாக, சில பொருட்களை இறக்குமதி செய்வதற்கு முற்பணங்களை அதிகரிக்கக்கூடாது;

(இ) சில பொருட்களின் கேள்வுகளின் பயனுக விளையும் கேள்வுக்கொள்வனவுகளுக்கு ஒப்பந்தங்களைப் பிணையாக வைத்தாலன்றி கேள்வுக்கொள்வனவு இயக்கங்களுக்கு நிதியீட்டுதல் கூடாது. அத்தகைய ஒப்பந்தங்களின் கீழ், கேள்வுக்காரர்களிடமிருந்து விற்பனை செய்தவர்களுக்கு உள்ள வருமதியில் ⅓ பங்குக்குமேல், அல்லது கேள்வுகொள்ளப்பட்ட பொருட்களின் பெறுமானத்தில் ¼ பங்குக்கு மேல், எது குறைந்ததோ அதற்குமேல், மேற்கூறிய கேள்வுக்கொள்வனவுகளுக்கான முற்பணங்கள் வழங்கப்படாது.

(ஈ) சிலவகைப்பொருட்களின் கொள்ளனவுக்காக வங்கிகளுக்கு வழங்கப்படும் முற்பணங்களின் தொகையை அதிகரித்தல் கூடாது.

(அ), (ஆ) இல் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்ட பொருட்கள் பின்வருமாறு:—

காற்ருேட்டத்தை சீராக்கும் இயந்திரச் சாதனங்கள்; பியர், ஏல், போட்டர், மற்றும் தானியங்களிலிருந்து வடிக்கப்படும் குடிவகை, தவிர்ந்த ஏனைய மதுபானங்கள்; சித்திரத் திரைச்சீலைகள், கம்பளங்கள், பவுண்டன் பேனுக்களும், நிப்புகள் தவிர்ந்த ஏனைய உறுப்புக்களும்; தளபாடங்களும் இணைப்புக்களும்; மோட்டார் வண்டிகளும், நிலையச்சுமை வண்டிகளும், காகிதமும் காகிதமட்டையும், வாசனைத்திரவியம் வண்ணப் பொருட்களும், யவுக்காரங்களும், மினுக்கவும் சுத்தம்செய்யவும் உள்ள தயாரிப்புகளும், புகைப்பட இயக்கப்பட உபகரணங்களும், கருவிகளும் புகைப்படங்களுடன், இயக்கப்படங்களும் 35 மில்லி மீட்டர் திரைப்படங்கள்; கடிகாரங்கள்; குதிரைகள்.

(இ), (ஈ) இல் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்ட பொருட்கள்* பின்வருவன:—

இறக்குமதிசெய்யப்படும் காற்ருேட்டத்தைச் சீராக்கும் இயந்திரச்சாதனங்கள், தளபாடங்களும், இணைப்புக்களும், மோட்டார் வண்டிகளும், நிலையச்சுமை வண்டிகளும், புகைப்பட இயக்கப்பட உபகரணங்களும் கருவிகளும், புகைப்படங்களும், இயக்கப் படங்களும், 35 மில்லிமீட்டர் திரைப்படங்களும்.

1960ம் ஆண்டு ஆவணி மாதம் 13ம் திகதி தொடக்கம், அரசாங்கப்பிணைகளின் அடைமானத்தின் பேரில் மகாவங்கியிடமிருந்து வர்த்தக வங்கிகள் பெற்றுக்கொண்ட முற்பணங்களின் மேல் உள்ள வட்டி விகிதத்தை மகாவங்கி 2½ சதவீதத்திலிருந்து 4 சதவீதத்திற்கு உயர்த்தியது. ஆயினும் இன்றியமையாத வர்த்தக உற்பத்தித் தேவைகளுக்காக வழங்கப்படும் வர்த்தக வங்கிக்கொடுகடன் பேரில் உள்ள வட்டி போன்ற கட்டணங்களையே, மேற்படி வட்டிவீத உயர்ச்சி அதிகரிக்கச்செய்து பாதகமாகப் பாதியாவண்ணம், சிலவகைக்கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தப்பட்ட வகையில், வழங்கு தவணை வாக்குறுதிப் பத்திரங்களின் அடமானங்களின் பேரில் மகாவங்கி வர்த்தக வங்கிகளுக்கு வழங்கும் கடன் மேல் உள்ள வட்டி வீதம் 2½ சதவீதமாக நிலைநாட்டப்பட்டது. மேற்குறிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பின்வருவன சம்பந்தப்பட்டவையாகும்.

(அ) உணவு, ஆடைவகைகள், பருத்திநூல், மருந்துவகை உற்பத்திகள், உரம் விவசாய உபகரணங்கள் முதலியவற்றை இறக்குமதி செய்தல், கொள்வனவு செய்தல், இலங்கையில் ஏற்றி இறக்குதல் அல்லது சேகரித்து களஞ்சியத்திடுவது.

(ஆ) விவசாய உற்பத்திப்பொருட்கள், தாதுற்பத்திப் பொருட்கள், உலோக உற்பத்தி பொருட்கள், கைத்தொழிற் பொருட்கள், முதலியனவற்றை இலங்கையில் உற்பத்தி செய்வதற்கு அல்லது தயாரிப்பதற்கு அல்லது பதனிடுவதற்கு நிதி திரட்டுதல்.

(இ) உள்நாட்டிற் தயாரிக்கப்பட்ட பொருட்களையும், உற்பத்திகளையும் கொள்ளனவு செய்வதற்கு, இலங்கையில் ஏற்றி இறக்குவதற்கு, அல்லது சேகரித்து களஞ்சியப்படுத்துவதற்கு நிதி திரட்டுதல்.

---

*காகிதமும் காகித மட்டையும் பின்பு இந்நிபந்தனைகளில் நின்று நீக்கப்பட்டன.

அதே நேரத்தில் பின்வரும் முற்பணங்களின் பேரில் வர்த்தக வங்கிகள் விதிக்கக்கூடிய ஆகக் கூடிய வட்டி வீதம் ஆவணி மாதம் 12ம் திகதியில் உள்ளபடி நிலைநாட்டப்பட்டது. இவ்வட்டி வீதம் எச்சந்தர்ப்பத்திலும் 6 சதவீதத்திற்கு மேற்படக் கூடாதெனவும் விதிக்கப்பட்டது.

(அ) இறக்குமதிகள் தவிர்ந்த ஏனைய பொருட்கள் உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்கு அல்லது சேகரித்துக் களஞ்சியப்படுத்துவதற்கு அல்லது இலங்கையில் ஏற்றி இறக்குவதற்காக நிதி ஈட்டுவதற்கு வழங்கப்பட்ட முற்பணங்கள்.

(ஆ) விவசாய உற்பத்திப் பொருட்கள், தாது உற்பத்தி பொருட்கள், உலோக உற்பத்திப் பொருட்கள் அல்லது கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் முதலியனவற்றை உற்பத்தி செய்வதற்காக அல்லது தயாரிப்பதற்காக அல்லது பதனிடுவதற்காக நிதி ஈட்டுவதற்கு வழங்கப்படும் முற்பணங்கள்.

(இ) பின்வரும் இறக்குமதிகளை இறக்குமதி செய்வதற்கும், கொள்வனவு செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும், சேகரித்து களஞ்சியப்படுத்துவதற்கும் நிதி ஈட்டுவதற்காக வழங்கப்படும் முற்பணங்கள்:—ஆடை வகை, பருத்திநூல், மருந்துவகை உற்பத்திகள், உரம், விவசாய உபகரணங்கள்*.

மேலும் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையால், மேற்படி தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுப்பாடுகள் பலமூட்டப்பட்டன.

1960ம் ஆண்டு ஆவணி மாதம் 26ம் திகதி தொடக்கம் கேள்வி வைப்புக்களுக்கு எதிராக மகாவங்கியில் வர்த்தக வங்கிகள் வைக்கும் தத்தம் நிதிச்சட்ட முறையான ஒதுக்கங்கள் 10 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு அதிகரிக்குமாறு நிபந்தனை விதிக்கப்பட்டது. தவணை வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள் முதலியனவற்றிற்கு எதிராக வைக்கப்படவேண்டிய ஒதுக்கங்கள் 5 சதவீதமாகவே மாற்றமின்றித் தங்கிநின்றன.

**(3) வர்த்தக வங்கிகள்.**

இலங்கை வங்கி கொழும்பில் ஒரு புதிய கிளையைத் திறந்தது. இதன் பயனாக நகரத்தில் உள்ள இதன் அலுவலகங்களின், எண்ணிக்கை ஏழாக அதிகரித்தது. கொழும்புக்கு வெளியே உள்ளவை 25 ஆகத் தங்கி நின்றன. ஆண்டு முடிவில் இலங்கையில் உள்ள அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கை 45 ஆக இருந்தது. இதில் 19 கொழும்பில் அமைந்திருந்தன.

உள்நாட்டு வங்கிகளுக்கும் அந்நிய வங்கிகளுக்கும் இடையே உள்ள வங்கி அலுவலகங்களின் பங்கீட்டையும் வைப்புகளின் பங்கீட்டையும் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை II—34

**வங்கி அலுவலகங்கள், வைபுக்கள் முதலியவற்றின் பங்கீடு.**

| மொத்தம் | | | இலங்கை மகாவங்கி | | | பிரித்தானிய வங்கிகள் | | | இந்திய வங்கிகளும் ஏனைய வைப்புகளும் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | |
| | இலட்சம் ரூபாய்களில் தொகை | % | | இலட்சம் ரூபாய்களில் தொகை | % | | இலட்சம் ரூபாய்களில் தொகை | % | | இலட்சம் ரூபாய்களில் தொகை | % |
| 45 | 1,057 | 100 | 28 | 4,720 | 45 | 12 | 5,060 | 48 | 5 | 790 | 7 |

மூலம்: இலங்கை மகாவங்கி.

* "விவசாய உபகரணங்கள்" பின்னர் "விவசாய கைத்தொழில் உபகரணங்களும் இயந்திரத் தொகுதிகளும் அவற்றின் உறுப்புக்களும்" எனத் திருத்தியமைக்கப்பட்டது.

வர்த்தக வங்கிகளின் இருப்புச் சொத்துக்களும், பொறுப்புக்களும் பின்னிணைப்பு IIல் உள்ள 4ம் அட்டவணையில் விரிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அவைகளின் பங்கீடு பின்வரும் அட்டவணையில் சுருக்கித்தரப்பட்டுள்ளது.

அட்டவணை II—35

**வர்த்தக வங்கிகளின் இருப்புச் சொத்துக்கள், பொறுப்புக்கள் முதலியவற்றின் பங்கீடுகள்**
**(மாத எண்தொகைகளின் சராசரி)**

இலட்சம் ரூபாய்களில்.

| | 1952 | 1953 | 1954 | 1955 | 1956 | 1957 | 1958 | 1959 | 1960 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கையிருப்பிலுள்ள பணமும் (நியதிச்சட்டமுறையான ஒதுக்குப்பணமும் உட்பட) மகாவங்கியில் வைக்கப்பட்ட வைப்புக்களும் .. .. .. | 1770 | 1280 | 1060 | 1490 | 1480 | 1390 | 1190 | 1160 | 1320 |
| அந்நிய நிலுவைகள் .. .. .. | 970 | 440 | 550 | 1120 | 1160 | 720 | 500 | 520 | 580 |
| இறைசேரி உண்டியல்கள் .. .. | 390 | 550 | 600 | 510 | 390 | 340 | 160 | 240 | 280 |
| கழிவோடுமாறப்பட்ட உண்டியல்கள் | 640 | 650 | 730 | 940 | 930 | 1000 | 1160 | 1190 | 1150 |
| **மொத்த திரவச் சொத்துக்கள்** .. | 3770 | 2920 | 2940 | 4060 | 3960 | 3450 | 3010 | 3110 | 3330 |
| **மொத்தமுதலீடுகள்** (1) .. .. | 2350 | 2350 | 2210 | 2450 | 2910 | 3080 | 2960 | 2850 | 2840 |
| **மொத்தக் கடன்களும் மேலதிகப்பற்றுக்களும்** .. .. .. .. | 1760 | 1820 | 2080 | 2440 | 2730 | 3400 | 3630 | 3950 | 4300 |
| கேள்விவைப்புக்கள்(2) .. .. | 6530 | 5730 | 5620 | 6750 | 7310 | 7210 | 6610 | 6550 | 6570 |
| தவணைவைப்புக்களும் சேமிப்புவைப்புக்களும் .. .. .. .. | 950 | 1020 | 1260 | 1900 | 2060 | 2400 | 2630 | 3000 | 3400 |
| **மொத்த வைப்புக்கள்** .. .. | 7540 | 6770 | 6890 | 8690 | 9410 | 9650 | 9260 | 9550 | 9980 |
| சதவிதம்:— | % | % | % | % | % | % | % | % | % |
| கேள்வி வைப்புக்களுக்கு கையிருப்பிலுள்ள பணத்தின் விகிதம் .. .. | 27.1 | 22.3 | 18.9 | 22.1 | 20.2 | 19.3 | 18.0 | 17.7 | 20.1 |
| மொத்த வைப்புக்களுக்கு கையிருப்பிலுள்ள பணத்தின் விகிதம் .. .. | 23.5 | 18.9 | 15.4 | 17.1 | 15.7 | 14.4 | 12.9 | 12.1 | 13.2 |
| மொத்த வைப்புக்களுக்கு அந்நிய நிலுவைகளின் விகிதம் .. .. | 12.9 | 6.5 | 8.0 | 12.9 | 12.3 | 7.5 | 5.4 | 5.4 | 5.8 |
| மொத்த வைப்புக்களுக்கு இறைசேரி உண்டியல்களின் விகிதம் .. .. | 5.2 | 8.1 | 8.7 | 5.9 | 4.1 | 3.5 | 1.7 | 2.5 | 2.8 |
| மொத்த வைப்புக்களுக்கு கழிவோடு மாற்றப்பட்ட வர்த்தக உண்டியல்களின் விகிதம் .. .. .. .. | 8.5 | 9.6 | 10.6 | 10.8 | 9.9 | 10.4 | 12.5 | 12.5 | 11.5 |
| கேள்வி வைப்புக்களுக்கு திரவச் சொத்துக்களின் விகிதம் .. .. | 57.7 | 50.9 | 52.3 | 60.1 | 54.2 | 47.9 | 45.5 | 47.5 | 50.7 |
| மொத்த வைப்புக்களுக்கு திரவச் சொத்துக்களின் விகிதம் .. .. | 50.0 | 43.1 | 42.7 | 46.7 | 42.1 | 35.8 | 32.5 | 32.6 | 33.4 |
| மொத்த வைப்புக்களுக்கு முதலீடுகளின் விகிதம் .. .. .. .. | 31.2 | 34.7 | 32.1 | 28.2 | 30.9 | 31.9 | 32.0 | 29.8 | 28.5 |
| மொத்த வைப்புக்களுக்கு கடன்கள், மேலதிகப்பற்றுக்களின் விகிதமும் .. | 23.3 | 26.9 | 30.2 | 28.1 | 29.0 | 35.2 | 39.2 | 41.4 | 43.1 |

மூலம்: இலங்கை மகாவங்கி.

(1) அரசாங்கப்பிணைகளும், அரசாங்க உத்தரவாதப் பிணைகளும், மகாவங்கி வெளியீடுகளும்.
(2) உள்நாட்டு வங்கிகள் இடையே உள்ள வைப்புக்களை உள்ளடக்கா.

1959ம் ஆண்டு முடிவில் 9931 இலட்சம் ரூபாய்களாகிய வைப்புப் பொறுப்புகள், 1960ம் ஆண்டு முடிவில் 10571 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தன. முந்தைய ஆண்டில் 463 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்த இவை இவ்வாண்டு மேற்காட்டியபடி 640 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. 1959ம் ஆண்டில் 9547 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய சராசரி வைப்புக்கள், 1960ம் ஆண்டு 9976 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தன. இந்த அதிகரிப்பு பிரதானமாக தவணை வைப்புக்களில் ஏற்பட்ட உயர்ச்சி காரணமாகவே உண்டானது. சராசரி கேள்வி வைப்புக்கள் 114 இலட்சம் ரூபாய்களால் அதிகரிக்க, தவணை வைப்புக்கள் 287 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்தன. 1960ம் ஆண்டு தவணை வைப்

புக்களில் ஏற்பட்ட உயர்ச்சி ஒரு பக்கத்தில் பண வருமானங்களின் அதிகரிப்பையும், மறுபக்கத்தில் தவணைவைப்புக்களின் பேரில் வர்த்தக வங்கிகள்கொடுக்கும் வட்டி விகிதங்களின் அதிகரிப்பையும் பிரதிபலிக்கின்றது. பங்குனி-சித்திரையில் சகல பெரிய வங்கிகளும், 3 முதல் 11 மாதங்கள் வரை உள்ள தவணை வைப்புக்களின் பேரில் கொடுக்கும் தங்கள் வட்டி விகிதங்களை 2 சதவீதத்திலிருந்து 2½ சதவீதத்திற்கு உயர்த்தின.

1959ம் ஆண்டு புரட்டாதி மாத முடிவிலும், 1960ம் ஆண்டு பங்குனி, புரட்டாதி மாதங்களின் முடிவிலும் வர்த்தக வங்கிகளில் வைத்த வைப்புக்களின் உடமையாளர்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது. இவை மகாவங்கியின் அரையாண்டு அளவைகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

அட்டவணை II—36

**வைப்புக்களின் உடமையாளர்கள்**

இலட்சம் ரூபாய்களில் தொகை

| உடமையாளர்கள் | கேள்வி | | தவணை | | சேமிப்பு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை | சத வீதம் | தொகை | சத வீதம் | தொகை | சத வீதம் | தொகை | சத வீதம் |
| **நிதி நிலையங்கள்:** | | | | | | | | |
| 1959, புரட்டாதி .. | 423 | 7.6 | 435 | 26.3 | 31 | 2.7 | 889 | 10.6 |
| 1960, பங்குனி .. | 507 | 8.5 | 471 | 27.4 | 64 | 5.2 | 1042 | 11.7 |
| 1960, புரட்டாதி .. | 487 | 8.3 | 513 | 24.2 | 53 | 4.2 | 1052 | 11.4 |
| **தோட்டங்கள்:** | | | | | | | | |
| 1959, புரட்டாதி .. | 1356 | 24.2 | 355 | 21.4 | 10 | 0.9 | 1721 | 20.5 |
| 1960, பங்குனி .. | 1538 | 25.9 | 375 | 21.8 | 13 | 1.1 | 1927 | 21.7 |
| 1960, புரட்டாதி .. | 1293 | 22.0 | 524 | 24.7 | 14 | 1.1 | 1831 | 19.8 |
| **வர்த்தகம்:** | | | | | | | | |
| 1959, புரட்டாதி .. | 605 | 10.8 | 91 | 5.5 | 3 | 0.3 | 698 | 8.3 |
| 1960, பங்குனி .. | 633 | 10.7 | 99 | 5.8 | 8 | 0.7 | 740 | 8.3 |
| 1960, புரட்டாதி .. | 733 | 12.5 | 122 | 5.7 | 5 | 0.4 | 861 | 9.3 |
| **ஏனைய வியாபாரம்:** | | | | | | | | |
| 1959, புரட்டாதி .. | 651 | 11.6 | 264 | 15.9 | 10 | 0.9 | 925 | 11.0 |
| 1960, பங்குனி .. | 542 | 9.1 | 297 | 17.3 | 17 | 1.4 | 856 | 9.6 |
| 1960, புரட்டாதி .. | 507 | 8.6 | 387 | 18.2 | 12 | 1.0 | 906 | 9.8 |
| **உள்ளூர் ஆட்சிச்சபைகள்:** | | | | | | | | |
| 1959, புரட்டாதி .. | 122 | 2.2 | 101 | 6.1 | 1 | — | 225 | 2.7 |
| 1960, பங்குனி .. | 179 | 3.0 | 68 | 4.0 | 2 | 0.2 | 249 | 2.8 |
| 1960, புரட்டாதி .. | 169 | 2.9 | 61 | 2.9 | 2 | 0.2 | 232 | 2.5 |
| **வியாபார சம்பந்தமல்லாத நிலையங்கள்:** | | | | | | | | |
| 1959, புரட்டாதி .. | 255 | 4.6 | 55 | 3.3 | 25 | 2.2 | 335 | 4.0 |
| 1960, பங்குனி .. | 287 | 4.8 | 96 | 5.6 | 28 | 2.3 | 411 | 4.6 |
| 1960, புரட்டாதி .. | 268 | 4.6 | 80 | 3.8 | 27 | 2.2 | 376 | 4.1 |
| **தனியாட்கள்:** | | | | | | | | |
| 1959, புரட்டாதி .. | 2189 | 39.0 | 354 | 21.4 | 1073 | 93.1 | 3616 | 43.0 |
| 1960, பங்குனி .. | 2249 | 37.9 | 312 | 18.1 | 1089 | 89.2 | 3650 | 41.1 |
| 1960, புரட்டாதி .. | 2417 | 41.1 | 437 | 20.6 | 1138 | 91.0 | 3991 | 43.1 |
| **மொத்தம்:** | | | | | | | | |
| 1959, புரட்டாதி .. | 5601 | 100.0 | 1656 | 100.0 | 1153 | 100.0 | 8410 | 100.0 |
| 1960, பங்குனி .. | 5936 | 100.0 | 1719 | 100.0 | 1221 | 100.0 | 8876 | 100.0 |
| 1960, புரட்டாதி .. | 5874 | 100.0 | 2124 | 100.0 | 1250 | 100.0 | 9249 | 100.0 |

மூலம்: இலங்கைமகாவங்கி.

1960ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30ம் திகதியுடன் முடிவுற்ற ஓராண்டில் பிரதானமாக தனியாட்களின் வைப்புக்கள் 375 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்தமையாலும், வியாபார நிலையங்களின் வைப்புக்கள் 163 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்தமையாலும், நிதிநிலையங்களின் வைப்புகள் 163 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்தமையாலும், தோட்டங்களின் வைப்புக்கள் 110 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்தமையாலும், மொத்த வைப்புக்கள் 839 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன.

தவணை வைப்புக்களில் ஏற்பட்ட முன்னர் குறிப்பிட்ட வளர்ச்சியின் (ஏனைய வைப்புக்களது வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில்) முக்கியத்திவத்தை 1959ம் ஆண்டு, புரட்டாதிமாதம் 30ம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான விபரங்களைக்காட்டும் மேலேயுள்ள அட்டவணையிலிருந்து அறியலாம். தவணை வைப்புக்களில் ஏற்பட்ட இவ்வுயர்ச்சி, உள்ளூர் ஆட்சிச்சபைகள் தவிர்ந்த ஏனைய வைப்புக்களில் ஏற்பட்ட உயர்ச்சியை உள்ளடக்கும். 1960ம் ஆண்டு பங்குனி மாதம் சகல பெரிய வங்கிகளும் வைப்புக்களின் பேரில் கொடுக்கப்படும் தத்தம் வட்டி வீதங்களை அதிகரித்தன. பின்னர்தான் தவணை வைப்புக்களில் ஏற்பட்ட இவ்வுயர்ச்சி பிரதானமாக உண்டானது என்பதை இங்கே கவனித்தல்வேண்டும்.

1960ம் ஆண்டு ஆவணி மாதத்தில் மகாவங்கி கொடுகடன் கட்டுப்பாடு நடவடிக்கைகளைப் புகுத்துமுன்பு, இவ்வாண்டில், வர்த்தக வங்கிகள் தங்கள் திரவச் சொத்துக்களைக் குறைப்பதன் மூலம் தனிப்பட்டோர் துறைக்கு வழங்கும் கொடுகடனை விரிவாக்கின. 1960ல் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், கொடுகடன்களும், மேலதிகப் பற்றுகளும் அதிகரிக்க, இறைசேரி உண்டியல்கள் உட்பட இறைசேரி உண்டியல்களினுல் வரும் பயன்கள் உயர்ந்து சென்ற பொழுதிலும், திரவச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தன. இக்காலத்தில் நீண்டகால அரசாங்க பிணைகளில் செய்யப்படும் முதலீடுகள் அநேகமாக மாற்றமின்றித் தங்கிநின்றது. ஆயினும் ஆவணி மாதத்திற்குப் பின்னர் கொடுகடன் மேலதிகப் பற்றுகள் முதலியனவற்றில் வீழ்ச்சியும், திரவச் சொத்துக்களில், குறிப்பாக பணத்திலும், இறைசேரி உண்டியல் உடமைகளிலும், மேற்படி வீழ்ச்சிக்கு நேர் நிகரான ஒரு உயர்ச்சியும் ஏற்பட்டன. ஆவணி மாதத்திற்கு பின்னர், அரசாங்க பிணைகளிற் செய்யப்படும் முதலீடுகளும் சிறிது அதிகரித்தன.

1959ம் ஆண்டின் முடிவில் 1358 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய மகாவங்கியிடம் வைத்திருந்த பணமும் கையிருப்புப் பணமும், ஆடிமாத முடிவில் 1091 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைந்தன. ஆனுல் இஃது 1960ம் ஆண்டு முடிவில் 1761 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. 1959ம் ஆண்டு முடிவில் 459 இலட்சம் ரூபாய்களாக இருந்த இறைசேரி உண்டியல் உடமைகள், 1960ம் ஆண்டு ஆவணி மாத முடிவில் 65 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைந்து, ஆண்டு முடிவில் 479 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தன. மகாவங்கியிடம் வைக்கும் பணத்தில் ஏற்பட்ட உயர்ச்சிக்கு ஆவணி மாத முடிவில் ஒதுக்க விகிதத்தின் அதிகரிப்பைத் தொடர்ந்து, நியம ஒதுக்கங்களில் ஏற்பட்ட உயர்ச்சி ஒரு காரணமாகும். 1959ம் ஆண்டு முறையே 1158 இலட்சம் ரூபாய்களாகவும், 242 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கிய பணம், இறைசேரி உண்டியல்கள் முதலியனவற்றின் சராசரி உடைமைகள், 1960ம் ஆண்டு, முறையே 1318 இலட்சம் ரூபாய்களுக்கும், 285 இலட்சம் ரூபாய்களுக்கும் அதிகரித்தன. 1960ம் ஆண்டு அந்நிய நிலுவைகளில் ஏற்பட்ட நிகர அதிகரிப்பு 54 இலட்சம் ரூபாய்களாக விளங்க, 1959ம் ஆண்டு 517 இலட்சம் ரூபாய்களாக இருந்த சராசரி உடைமைகள், 1960ம் ஆண்டு 577 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தன. ஆயினும் 1959ம் ஆண்டு 1194 இலட்சம் ரூபாய்களாக இருந்த, கொள்வனவு செய்யப்பட்டு, கழிவோடு மாற்றப்பட்ட உண்டில்களின் மாதச் சராசரி 1960ம் ஆண்டு 1147 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைந்தன. 1959ம் ஆண்டு 3110 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய மொத்தத் திரவச் சொத்துக்களின் சராசரி 1960ம் ஆண்டு 3326 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தன. அதே காலத்தில் கேள்வி வைப்புக்களுக்கு திரவச் சொத்துக்களின் விகிதச்சராசரி 47.5 சதவீதத்திலிருந்து 50.7 சதவீதத்திற்கு அதிகரித்தது.

1960ம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் தாழ்வாக விளங்கிய மேலதிக ஒதுக்கங்களும் புரட்டாதி மாதத்துடன் ஆரம்பமாகும் நான்கு மாத காலத்தில் அதிகரித்தன. சிலவகை கொடுகடன்களை வர்த்தக வங்கிகள் நிறுத்தும்படி தூண்டிய மகாவங்கி மேற்கொண்ட நாணய நடவடிக்கைகளின் பயனை மேற்கூறியது

ஓரளவு பிரதிபலிக்கின்றது. இவ்விதமாக ஆடி மாத முடிவில் 14 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய மேலதிக ஒழுக்கங்கள் ஆவணிமாத முடிவில் 63 இலட்சம் ரூபாய்களுக்கும், புரட்டாதி மாத முடிவில் 220 இலட்சம் ரூபாய்களுக்கும், ஆண்டு முடிவில் 395 இலட்சம் ரூபாய்களுக்கும் உயர்ந்தன. 1959ம் ஆண்டு 47 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய மேலதிக ஒதுக்கங்களின் சராசரி மட்டம் 1960ம் ஆண்டில் 129 இலட்சம் ரூபாய்களாக இருந்தன.

1960ம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பல வங்கிகள் தமது தாழ்ந்த ஒதுக்க நிலைமை காரணமாக மகாவங்கியிடமிருந்து கடன் வாங்கின. எனினும் மேலதிக ஒதுக்கங்கள்அதிகரித்த இவ்வாண்டின் மீதிக்காலத்தில், ஒரு வங்கி அல்லது இரு வங்கிகள் மட்டும் மகாவங்கியிடமிருந்து கடன் வாங்கின. ஆயினும் பிற்கூறிய காலத்தில் கடன்பட்ட தொகையின் சராசரி, முதல் எட்டு மாதங்களிலும் இருந்தவற்றிலும் பார்க்க உயர்வாகவே விளங்கியது. 1960ம் ஆண்டு ஆவணி மாதத்திற்குப் பின்னர், வங்கிகள் பிரதானமாக வழங்குதவணை வாக்குறுதிப்பத்திரங்களின் பிணைகளுக்கெதிராக, 2½ சதவீத சலுகை வட்டி விகிதத்தில் கடன் வாங்கின. 1959ம் ஆண்டில் 58 இலட்சம் ரூபாய்களாக இருந்த மொத்தக் கடன் நிலுவைகளின் மாதச் சராசரி 1960ம் ஆண்டு 130 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தன.

முந்தைய ஆண்டிற் பார்க்க, கடன் நிலுவைகளின் மாதச் சராசரி தாழ்வாக விளங்கியதெனினும், 1960ம் ஆண்டு வர்த்தக வங்கிகள் இடையே உண்டான கடன்பாடு ஓர் உயர்ந்த மட்டத்திலேயே தங்கி நின்றது. 1959ம் ஆண்டில் 292 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய கடன் நிலுவைகளின் மாதச்சராசரி 1960ம் ஆண்டில் 238 இலட்சம் ரூபாய்களாக விளங்கின. 1960ம் ஆண்டின் முதல் மாதங்களிலும் பார்க்க, ஆவணி மாதத்திற்குப் பின்னர் வங்கிகள் இடையே உண்டான கடன்பாடுகளின் தொகை குறைவாக இருந்ததென்பது கவனிக்கப்படல் வேண்டும். நெருக்கடியான (இறுக்கமான) பணநிலைமையின் கீழ் வங்கிகள் இடையே உண்டான கடன்பாட்டில் உயர்ந்த மட்டத்தை பிரதிபலித்து, வங்கிகள் இடையே உண்டான அழைப்புக் கடன் வட்டி விகிதம் ¼ சத வீதத்திலிருந்து, சித்திரை மாதம் 1¾ சதவீதத்திற்கு அதிகரித்தது. அரசாங்கப்பிணைகளின் அடைமானத்தின் பேரில் மகாவங்கியின் வட்டி விகிதம் அதிகரித்ததைத் தொடர்ந்து வங்கிகளின் முற்பண வட்டி விகிதங்களில் ஏற்பட்ட பொது உயர்ச்சியின் ஒரு பகுதியாக, மேற்கூறிய அழைப்புக்கடன் வட்டி வீதம் ஆவணி மாதம் மறுபடியும் ¾ சதவீதத்தால் உயர்ந்து 2½ சதவீதமாக விளங்கியது. ஆனால் ஐப்பசி மாதம் வங்கிகளின் ஒதுக்கப்பண நிலைமையில் பின்னர் ஏற்பட்ட சீர்த்திருத்தத்தினால் இஃது 2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

1959 ஆண்டு 3954 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய, வர்த்தக வங்கிகளின் கொடுகடன்கள், மேலதிகப்பற்றுக்கள் முதலியனவற்றின் மாதச்சராசரி 1960ம் ஆண்டு 4297 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தது. முன்னரே கூறியபடி, முற்பணங்களில் ஏற்பட்ட உயர்ச்சி, ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் உண்டானது. 1959ம் ஆண்டு மார்கழி மாத முடிவில் 5087 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய மொத்த முற்பணங்கள் ஆவணி மாத முடிவில், 482 இலட்சம் ரூபாய்களால், 5569 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தன. புரட்டாதி மாதத்தில் இவை சிறிது 5577 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. அதன் பின்னர் ஆண்டு முடிவில் 5439 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சி, மகாவங்கியின் ஆவணி மாதக் கொடுகடன் கட்டுப்பாடு நடவடிக்கைகளின் பாதிப்பைப் பிரதிபலிக்கின்றது. 1959ம் ஆண்டில், மொத்த வைப்புக்களுக்கு 41.4 சதவீதமாகிய கடன்கள், மேலதிகப் பற்றுக்கள் முதலியனவற்றின் சராசரி விகிதம் 1960ம் ஆண்டு 43.1 சதவீதத்திற்கு உயர்ந்தது.

நாணய நடவடிக்கைகளின் விளைவாக, முற்பணங்களின் அமைப்பிலும் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. நாணய விதி அதிகாரச் சட்டத்தின் 82 (1) ம் பிரிவு நியதிகளுக்கேற்ப, தேவையென்றால் மகாவங்கியிடமிருந்து 2¼சத வீதச் சலுகை வட்டி விகிதத்தில் தாம் கடன் வாங்குவதை சாத்தியமாக்குவதற்காக பல வர்த்தக வங்கிகள், ஆவணி மாதத்திற்குப் பின்னர் மேலதிகப் பற்றுக்களைக் கடன்களாக மாற்றின. அரசாங்கப்பிணைகளில் செய்யப்பட்ட முதலீடுகளில் குறிப்பிடத்தக்க மாற்றமொன்றும் ஏற்படவில்லை. ஏனெனின், ஆண்டின்

முதல் எட்டு மாதங்களில், கொடுகடனுக்காக உள்ள தனிப்பட்டோர் துறையின் கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பு, அரசாங்கப் பிணைகளில் வங்கி கடைமைகளை குறைப்பதன் மூலம் தான் நிரப்பப்பட்டது. ஆண்டு ஆரம்பத்தில் 2835 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய வங்கிகளின் அரசாங்கப்பிணை முதலீடுகள் புரட்டாதி மாத முடிவில் 2820 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைந்தன. ஆனால் இவை ஆண்டு முடிவில் 2875 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தன. 1959ம் ஆண்டில் 2846 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய மேற்படி உடமைகளின் மாதச் சராசரி 1960ம் ஆண்டு 2842 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைந்தன. மொத்த வைப்புக்களுக்கு, முதலீடுகளின் விகிதமும் 29.8 சதவீதத்திலிருந்து 28.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

அரையாண்டு அளவை விபரங்களின் அடிப்படையில், 1960ம் ஆண்டு புரட்டாதி 30ம் திகதியுடன் முடிவுற்ற ஓராண்டில் தனிப்பட்டோர் துறைக்கு வழங்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் முற்பணங்கள், எத்தேவைகளுக்காக வழங்கப்பட்டனவோ அவ்வகையில் பின்வரும்அட்டவணையில் பாகுபாடுபடுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை II—37

**எவ்வளவு காலத்திற்கு, எத்தேவைகளுக்கு வழங்கப்பட்டதென பாகுபடுத்திய முற்பணங்களின் அமைப்பு***

இலட்சம் ரூபாய்களில்.

| தேவை | குறுகிய-கால (6 மாதங்களுக் குள்ளே) | | நடுதரக்கால (6 முதல் 30 மாதங்க ளுக்குள்ளே) | | நீண்ட கால (30 மாதங்களுக்கு மேலே) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) (1),(7)ன் சதவீத மாக | (3) | (4) (3),(7)ன் சதவீத மாக | (5) | (6) (5),(7)ன் சதவீத மாக | (7) | (8),(7) மொத்தத்தின்சதவீத மாக |
| (அ) வர்த்தகம் | | | | | | | | |
| புரட்டாதி 1959 .. | 1669 | 44.0 | 1513 | 39.9 | 614 | 16.2 | 3796 | 71.9 |
| பங்குனி 1960 .. | 1722 | 44.1 | 1571 | 40.3 | 609 | 15.6 | 3901 | 70.8 |
| புரட்டாதி 1960 .. | 1944 | 50.5 | 1544 | 40.1 | 362 | 9.4 | 3851 | 68.7 |
| (ஆ) நிதி: | | | | | | | | |
| புரட்டாதி 1959 .. | 237 | 31.2 | 242 | 31.8 | 280 | 36.8 | 760 | 14.4 |
| பங்குனி 1960 .. | 201 | 24.9 | 349 | 43.2 | 257 | 31·8 | 807 | 14.6 |
| புரட்டாதி 1960 .. | 241 | 23.7 | 518 | 51.0 | 256 | 25.2 | 1016 | 18.1 |
| (இ) விவசாயம்: | | | | | | | | |
| புரட்டாதி 1959 .. | 31 | 30.1 | 50 | 48.5 | 22 | 21.4 | 103 | 2.0 |
| பங்குனி 1960 .. | 32 | 26.0 | 69 | 56.1 | 22 | 17.9 | 123 | 2.2 |
| புரட்டாதி 1960 .. | 26 | 25.0 | 48 | 46.2 | 30 | 28.8 | 104 | 1.9 |
| (ஈ) கைத்தொழில்: | | | | | | | | |
| புரட்டாதி 1959 .. | 46 | 18.9 | 156 | 64.2 | 40 | 16.5 | 243 | 4.6 |
| பங்குனி 1960 .. | 29 | 11.3 | 154 | 59.9 | 73 | 28.4 | 257 | 4.7 |
| புரட்டாதி 1960 .. | 22 | 10.9 | 83 | 41.3 | 95 | 47.3 | 201 | 3.6 |
| (உ) நுகர்ச்சி: | | | | | | | | |
| புரட்டாதி 1959 .. | 95 | 30.6 | 163 | 52.6 | 52 | 16.8 | 310 | 5.9 |
| பங்குனி 1960 .. | 99 | 29.2 | 151 | 44.5 | 89 | 26.3 | 339 | 6.2 |
| புரட்டாதி 1960 .. | 105 | 29.9 | 148 | 42.2 | 98 | 27.9 | 351 | 6.3 |
| (ஊ) ஏனைய கடன்கள்: | | | | | | | | |
| புரட்டாதி 1959 .. | 12 | 17.9 | 44 | 65.7 | 11 | 16.4 | 67 | 1.3 |
| பங்குனி 1960 .. | 9 | 11.0 | 59 | 72.0 | 14 | 17.1 | 82 | 1.5 |
| புரட்டாதி 1960 .. | 13 | 15.1 | 52 | 60.5 | 21 | 24.4 | 86 | 1.5 |
| மொத்தம்: | | | | | | | | |
| புரட்டாதி 1959 .. | 2090 | 39.6 | 2168 | 41.0 | 1020 | 19.3 | 5279 | 100.0 |
| பங்குனி 1960 .. | 2092 | 38.0 | 2353 | 42.7 | 1064 | 19.3 | 5509 | 100.0 |
| புரட்டாதி 1960 .. | 2352 | 41.9 | 2393 | 42.7 | 863 | 15.1 | 5609 | 100.0 |

மூலம் : இலங்கை மகாவங்கி.

*கடன்கள், மேலதிகப்பற்றுக்கள், கழிவோடு மாற்றப்பட்ட உண்டியல்கள் முதலியனவற்றை முற்பணங்கள் உள்ளடக்கும்.

1960-ம் ஆண்டு, புரட்டாதி 30-ம் திகதியுடன் முடிவுற்ற ஒரு ஆண்டில் வங்கிகள் வழங்கிய முற்பணங்களின் மொத்தம் 330 இலட்டம் ரூபாய்களால் அதிகரித்தது. இந்த அதிகரிப்பு, முக்கியமாக வர்த்தக, நிதித்தேவைகளுக் காகவே உண்டானது. 55 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்த, வர்த்தக தேவைக் கான முற்பணங்களின் மொத்தம் முந்திய ஆண்டைப்போலவே பிரதானமாக இறக்குமதி வியாபாரத்திற்காகவே வழங்கப்பட்டது. ஏற்றுமதி வியாபாரத்திற் காக வழங்கப்பட்ட முற்பணங்கள் 46 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைய, இறக்குமதி வியாபாரத்திற்காக வழங்கப்பட்டவை 94 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்தன. 256 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்த நிதித்தேவைகளுக்கான முற்பணங்கள், முக்கியமாக கேள்விக்கொள்வனவுக்கூட்டுநிலையங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களையே கொண்டிருந்தன. நுகர்ச்சி, விவசாயம் முதலிய தேவைகளுக்காக வழங்கப்பட்ட முற்பணங்களும் முறையே 41 இலட்சம் ரூபாய் களாலும், 1 இலட்சம் ரூபாய்களாலும் உயர்ந்தன. ஆனால் கைத்தொழிற் தேவைகளுக்காக, பிரதானமாக பொறியியல் கட்டட ஆக்கத் தொழில்களுக்காக, வழங்கப்பட்ட முற்பணங்கள் 42 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைந்தன.

இக்காலத்தில் வர்த்தக தேவைகளுக்கான முற்பணங்களில் அதிகரிப்பு ஏற் பட்ட பொழுதிலும் மொத்த முற்பணங்களின் விகிதமாக இவ்வகை முற்பணங் களை நோக்கும் பொழுது, இஃது 71.9 சதவீதத்திலிருந்து 68.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைய மொத்த முற்பணங்களுக்கு நிதித்தேவைகளுக்காக முற்பணங் களின் விகிதம் 14.4 சதவீதத்திலிருந்து 18.1 சதவீதத்திற்கு உயர்ந்தது. இஃது நிதித்தேவைகளுக்காக வழங்கப்பட்ட கூடியதொரு அதிகரிப்பைப் பிரதிபலிக் கின்றது. நுகர்ச்சித் தேவைகளுக்கான முற்பணங்களின் விகிதமும் 5.9 சதவீதத் திலிருந்து 6.3 சதவீதத்திற்கு அதிகரித்தது.

அரையாண்டு அளவைகளின் அடிப்படையில், எவ்வகைப்பிணைகளின் பேரில் முற்பணங்கள் வழங்கப்பட்டன என்பதைப் பின்வரும் அட்டவணை பாகுபடுத்திக் காட்டுகின்றது.

அட்டவணை II—38

**பிணைவகைப்படி வழங்கப்பட்ட முற்பணங்கள்**

| பிணைகளின் வகை | 1959, புரட்டாதி 30 | | 1960, பங்குனி | | 1960, புரட்டாதி 30 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை இலட்சம் ரூபாய் களில் | மொத்தத் தில் சத வீதம் | தொகை இலட்சம் ரூபாய் களில் | மொத்தத் தில் சத வீதம் | தொகை இலட்சம் ரூபாய் களில் | மொத்தத் தில் சத வீதம் |
| ஆவண உண்டியல்கள் .. | 1370 | 26.0 | 1416 | 25.7 | 1308 | 23.3 |
| அரசாங்கப் பிணைகள் .. | 107 | 2.0 | 118 | 2.1 | 118 | 2.1 |
| கூட்டுப்பங்குத் தொகுதி நிலையங்களின் பங்குகள் .. .. | 330 | 6.3 | 310 | 5.6 | 312 | 5.6 |
| தவணை வைப்புக்களும் சேமிப்புவைப் புக்களும் ஏனைய பண இருப்புக்களும் மற்றும் ஆயுட்கால காப்புறுதிப்பத்திரங் களும் .. .. | 130 | 2.5 | 145 | 2.6 | 160 | 2.9 |
| வியாபார இருப்புக்கள் .. | 1782 | 33.8 | 1800 | 32.7 | 1856 | 33.1 |
| அசைவற்ற சொத்து .. .. | 613 | 11.6 | 606 | 11.0 | 541 | 9.6 |
| ஏனையவை .. .. | 635 | 12.0 | 744 | 13.5 | 884 | 15.8 |
| பிணை அற்றவை .. .. | 310 | 5.9 | 369 | 6.7 | 430 | 7.7 |
| மொத்தம் .. | 5278 | 100.0 | 5509 | 100.0 | 5609 | 100.0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

''ஏனைய'' வகைப் பிணைகளுக்கெதிராக வழங்கப்பட்ட முற்பணங்கள் 249 இலட்சம் ரூபாய்களாலும், வியாபார இருப்புக்களுக்கெதிராக வழங்கப்பட்டவை 74 இலட்சம் ரூபாய்களாலும் பிணையற்ற முற்பணங்கள் 120 இலட்சம் ரூபாய் களாலும் அதிகரித்தன என்பதை, மேலேயுள்ள அட்டவணை காட்டுகின்றது. கேள்விக் கொள்வனவுப் பத்திரங்களின் பிணைகளுக்கெதிராக வழங்கப்பட்ட முற்

பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பையே ''ஏனைய'' வகை பிணைகளுக்கெதிராக வழங்கப்பட்ட முற்பணங்களின் அதிகரிப்பு பிரதானமாகக் குறிக்கும். அசைவற்ற சொத்துக்களைப் பிணையாக வைத்து பெறப்பட்ட முற்பணங்கள் 72 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றது.

முன்னர் ஆராயப்பட்ட, நிலையான வைப்புக்கள், வங்கிகள் இடை ஏற்பட்ட அழைப்புக்கடன், முதலியவற்றின் வட்டி வீத உயர்ச்சியோடு, அரசாங்கப் பிணை களின் அடைமானத்தின் பேரில் உள்ள மகா வங்கியின் வட்டி வீதத்தில் ஏற் பட்ட உயர்ச்சியை பின்தொடர்ந்து, வங்கிகள் முற்பணங்களின் பேரில் உள்ள தத்தம் வட்டி வீதங்களை உயர்த்தின. ஆவணி மாதத்தில் வர்த்தக உண்டியல்க ளின் பேரில் இருந்த ஆகக்கூடிய, ஆகக்குறைந்த வட்டிவீதங்கள் முறையே 1 சத வீதத்தாலும், 1½ சதவீதத்தாலும் அதிகரித்தன. பிணைகளுக்கு எதிராக வழங் கப்பட்ட முற்பணங்களின் ஆகக்குறைந்த வட்டி வீதங்களில் ஏற்பட்ட அதி கரிப்பு ½ சதவீதத்திற்கும் 1½ சதவீதத்திற்கும் இடையே மாறுபட, ஆகக்கூடிய வட்டி வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு ½ சதவீதத்திலிருந்து 2½ சதவீதத்திற்கு மாறுபட்டது. குறித்த கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமான வழங்குதவணை கள் வாக்குறுதிப் பத்திரங்களுக்கு எதிராக வழங்கப்பட்ட முற்பணங்களின் பேரில் உள்ள ஆகக்குறைந்த, ஆகக்கூடிய வட்டி வீதங்கள் முறையே 4½ சதவீத மாகவும், 6 சதவீதமாகவும் நிலைநாட்டப்பட்டன. ஆயினும் பிணையற்ற முற் பணங்களின் பேரில் உள்ள ஆகக் குறைந்த, ஆகக்கூடிய வட்டி வீதங்கள் மாற்ற மின்றியிருந்தன.

இறைசேரி உண்டியல் வட்டி விகிதம், தொடர்ந்து, உறுதியான முறையில் உயர்ந்து சென்றது. 1959-ம் ஆண்டு மார்கழி மாத முடிவில் 2.02 சதவீதமாக விளங்கிய இவ்வட்டி வீதம், 1960-ம் ஆண்டு ஐப்பசி மாத முடிவில் 2.60 சத வீதத்திற்கு உயர்ந்தது. ஆனால் அதன் பின்னர் இவ்வீதம் மாற்றமின்றியிருந்தது. இந்த வட்டி வீத உயர்ச்சி, இறைசேரி உண்டியல் மூலம் அரசாங்கம் படும் கடன் பாட்டில் ஏற்பட்ட அதிகரிப்பையே பிரதானமாகப் பிரதிபலிக்கின்றது.

எந்தெந்த வட்டி விகிதங்களில் முற்பணங்கள் கொடுக்கப்பட்டனவோ அவ் வகையில் பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன.

அட்டவணை II—39

**வட்டி விகிதங்களின்படி முற்பணங்கள்**

| வட்டி வீதம் (%) | 1959, புரட்டாதி 30 | | 1960, பங்குனி 31 | | 1960, புரட்டாதி 30 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை இலட்சம் ரூபாய் களில் | மொத்தத் தில் சத வீதம் | தொகை இலட்சம் ரூபாய் களில் | மொத்தத் தில் சத வீதம் | தொகை இலட்சம் ரூபாய் களில் | மொத்தத் தில் சத வீதம் |
| 2½ க்குக் கீழ் .. .. .. | 13 | 0.3 | 32 | 0.7 | 31 | 0.6 |
| 2½ ,, .. .. .. | 1 | — | — | — | — | — |
| 3 ,, .. .. .. | 101 | 2.2 | 108 | 2.3 | 109 | 2.2 |
| 3½ ,, .. .. .. | 132 | 2.9 | 109 | 2.3 | 114 | 2.3 |
| 4 ,, .. .. .. | 81 | 1.8 | 91 | 1.9 | 79 | 1.6 |
| 4½ ,, .. .. .. | 1874 | 41.1 | 1945 | 40.7 | 1486 | 30.0 |
| 5 ,, .. .. .. | 966 | 21.2 | 708 | 14.8 | 473 | 9.6 |
| 5½ ,, .. .. .. | 336 | 7.4 | 527 | 11.0 | 241 | 4.9 |
| 6 ,, .. .. .. | 903 | 19.8 | 1039 | 21.7 | 1331 | 26.9 |
| 6½ ,, .. .. .. | 77 | 1.7 | 143 | 3.0 | 372 | 7.5 |
| 7½ ,, .. .. .. | 33 | 0.7 | 36 | 0.8 | 602 | 12.2 |
| 7 ,, .. .. .. | 23 | 0.5 | 25 | 0.5 | 68 | 1.4 |
| 8 அதற்கு மேலும் .. .. | 23 | 0.5 | 21 | 0.4 | 42 | 0.8 |
| மொத்தம் .. | 4561 | 100.0 | 4784 | 100.0 | 4948 | 100.0 |

மூலம்: இலங்கைமகாவங்கி.

*நடைமுறைமாற்று விதங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ஏற்றுமதி உண்டியல்களை நீக்கி.

ஆவணி மாதத்தில் வங்கி வட்டி வீதத்தில் ஏற்பட்ட மாற்றத்தைத் தொடர்ந்து, வர்த்தக வங்கிகள் வழங்கும் முற்பணங்களின் பேரில் உள்ள வட்டி வீதங்கள் திருப்பியமைக்கப்பட்டமை, மேலேயுள்ள அட்டவணையிற் பிரதிபலிக்கின்றது. 1960, புரட்டாதி 30ம் திகதியுடன் முடிவுற்ற ஓராண்டில் $4\frac{1}{2}\%$, 5%, $5\frac{1}{2}\%$, வட்டிவீதங்களில் வழங்கப்பட்ட முற்பணங்கள் முறையே 388 இலட்சம் ரூபாய்களாலும், 493 இலட்சம் ரூபாய்களாலும், 95 இலட்சம் ரூபாய்களாலும் வீழ்ச்சியுற்றது. 6%, $6\frac{1}{2}\%$, 7% வட்டி வீதங்களில் வழங்கப்பட்டவை முறையே 428 இலட்சம் ரூபாய்களாலும், 295 இலட்சம் ரூபாய்களாலும், 569 இலட்சம் ரூபாய்களாலும் அதிகரித்தன. 1960ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30ம் திகதியில் உள்ளபடி, முற்பணங்களின் நிலுவையில் 51.2 சதவீதமானவை 6 சதவீதத்திற்கும் குறைந்த சதவீத வட்டிக்கும், 48.8 சதவீதமானவை 6 சதவீதத்திற்கு கூடிய சதவீத வட்டிக்கும், வழங்கப்பட்டவையாகும். 1959ம் ஆண்டில், 76.9 சதவீதமானவை 6 சதவீதத்திற்கு குறைந்த சதவீத வட்டிக்கும், 23.2 சதவீதமானவை 6 சதவீதத்திற்கும் அதற்கு கூடிய சதவீத வட்டிக்கும் வழங்கப்பட்டன.

வங்கித் தீர்ப்புக்கள், 7138 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய மாதச்சராசரியிலிருந்து, 1960ம் ஆண்டில் 7429 இலட்சம் ரூபாய்களான மாதச்சராசரிக்கு அதிகரித்தன.

### (3) ஏனைய நிதி நிலையங்கள்.

1959ம் ஆண்டு 665 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்த, வர்த்தக வங்கிகள், இலங்கை சேமிப்பு வங்கி, தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி, சேமிப்பு பத்திரங்கள் முதலியனவற்றில் இருந்த மொத்தச் சேமிப்பு வைப்புக்கள், 1960ம் ஆண்டில் 710 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தன. இந்த அதிகரிப்பில் ஏறக்குறைய 98 சதவீதம், வர்த்தக வங்கிகள், தபாற் கந்தோர் சேமிப்பு வங்கி முதலியவற்றின் சேமிப்பு வைப்புகளில் உண்டானது. 1959ம் ஆண்டில் வர்த்தக வங்கிகளின் சேமிப்பு வைப்புகளில் உண்டான அதிகரிப்பாகிய 348 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், 1960ம் ஆண்டு இந்த அதிகரிப்பு 528 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. 1959ம் ஆண்டு தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியில் ஏற்பட்ட உயர்ச்சியாகிய 166 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், 1960ம் ஆண்டில் உயர்ச்சி 167 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது.

அட்டவணை II—40

**சேமிப்பு வைப்புகளும், சேமிப்புப்பத்திரங்களும்**

இலட்சம் ரூபாய்களில்.

| | 1958ம் ஆண்டு முடிவில் | 1960ம் ஆண்டு முடிவில் | மாற்றம் |
|---|---|---|---|
| தபாற்கந்தோர் சேமிப்புவங்கி .. .. .. .. | 3209 | 3376* | + 167 |
| இலங்கை சேமிப்புவங்கி .. .. .. | 732 | 737* | + 5 |
| வர்த்தக வங்கிகள் (தவணை வைப்புக்களும், சேமிப்பு வைப்புக்களும்) .. .. .. .. .. | 3194 | 3722 | + 528 |
| சேமிப்பு பத்திரங்கள் .. .. .. .. .. | 312 | 322* | + 10 |
| மொத்தம் .. | 7447 | 8157* | + 710 |

மூலம்: இலங்கை மகாங்கி.

*தற்காலிகமானது.

ஊழியர் சேமநிதி இயக்கத்தின் இரண்டாவது ஆண்டாகிய 1960ல் இந்நிதியின் சேகரிப்புகள் கணிசமாக அதிகரித்தது. 1959ம் ஆண்டு 119 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய இச்சேகரிப்புகளின் தொகையுடன் ஒப்பிடுகையில் 1960ம் ஆண்டு இஃது 558 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. 1960ம் ஆண்டு ஏற்பட்ட இந்த உயர்ச்சி ஊழியர் சேமநிதியின் அதிகாரச்சட்டத்தின் கண்காணிப்பில் கொண்டு வரப்பட்ட தொழில்களின் அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது.

1959/1960ல் நீண்டகால கொடுகடன் வழங்கும் நிலையங்களின் இயக்கங்கள் விரிவடைந்தன. 1958/59ல் 8 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்ற தேச ஈட்டு வங்கி வழங்கிய கடன்கள், 1959/60ல் 32 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. 1958/59ம் ஆண்டு முடிவில் 484 இலட்சம் ரூபாய்களாக இருந்த கடனுடன் ஒப்பிடுகையில் 1959/60ம் ஆண்டு முடிவில் இஃது 562 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. 1959/60ல் தொகுதிகடன் முறிகள் ஒன்றும் வழங்கவில்லை. 1959ம் ஆண்டின் கடைசிப்பகுதியில் 4½ சதவீதத்திற்கு உயர்த்தப்பட்ட இவ்வங்கியின் கடன் வட்டிவீதம் 1960ம் ஆண்டில் மாற்றமின்றி இருந்தது.

கமத்தொழில், கைத்தொழில் நாணயக்கூட்டுத்தாபனத்தால், 1958/59ல் வழங்கப்பட்ட கடன் 45 இலட்சம் ரூபாய்களாக இருந்து, 1959/60ல் 51 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தது. கைத்தொழிற் தேவைகளுக்கான கடன்கள் 5 இலட்சம் ரூபாய்களால், 6 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைய, கமத்தொழிற் தேவைகளுக்கான கடன்கள் 11 இலட்சம் ரூபாய்களால், 45 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தன. 1958/59ம் ஆண்டு முடிவில் 309 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய கடன்களின் தொகை, 1959/60ம் ஆண்டு முடிவின் 318 இலட்சம் ரூபாய்களாக இருந்தது.

புதிய விவசாய கைத்தொழில் முயற்சிகளுக்கு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் அளித்த நிதியுதவி (கடன்களும், வழங்குநிதி முதலீடுகளும்) 1959ம் ஆண்டில் 42 இலட்சம் ரூபாய்களால் உயர, 1960ம் ஆண்டில் 61 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது. 1960ம் ஆண்டு முடிவில் நிதிகளின் மொத்தத்தொகை 200 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. இவை 38 திட்டங்களுக்காக வழங்கப்பட்டவையாகும். 1959ம் ஆண்டு முடிவில் நிதிகள் 139 இலட்சம் ரூபாய்களாகவும், திட்டங்கள் 31 ஆகவும் விளங்கின.

இலங்கைச்சேமிப்பு வங்கியின் கொடுகடன் இயக்கங்கள் பற்றிக் கடைசியாக கிடைத்த விபரங்கள் 1959ம் ஆண்டு சம்பந்தப்பட்டனவாகும். இதற்கு முந்தைய ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களாகிய 15 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், 1959ம் ஆண்டு வழங்கிய மொத்தக் கடன்கள் 14 இலட்சம் ரூபாய்களாக விழங்கின.

எவ்வகைக் காப்புறுதித் தொழிலையும் மேற்கொள்ளும் நோக்கத்துடன் ஒரு காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை நிறுவுவதற்காக, 1960ம் ஆண்டில் அரசாங்கம் சட்டமியற்றியது. ஆயினும் நியமித்த ஒரு திகதிக்கு பின்னர், இலங்கையில் ஆயுட்கால காப்புறுதித் தொழிலை மேற்கொள்ளும் தனியுரிமையை இக்கூட்டுத்தாபனம் பெற்றிருக்கும்.

தனியாட்களுக்கும் நிலையங்களுக்கும் நிதியுதவி அளிப்பதின் மூலம், கூட்டுறவு இயக்கம், கிராமக் கொடுகடன், விவசாயக்கொடுகடன் முதலியவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் ஒரு மக்கள் வங்கியை தாபிப்பதற்காக ஒரு மசோதாவையும் அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

## (ஊ) அரசாங்க நிதி

### 1959–60 நிதி ஆண்டு

1959–60 நிதியாண்டிற்கான இலங்கை அரசாங்கத்தின் கணக்குகள் 73ம் பக்கத்திலுள்ள அட்டவணை II-42ல் சுருக்கித்தரப்பட்டுள்ளன. முந்தைய நிதியாண்டுகளின் கணக்கு விபரங்களும் அத்துடன் தரப்பட்டுள்ளன. மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள, அரசாங்க வரவு செலவு திட்ட இயக்கங்களின் பிரதான அம்சங்கள் பின்வருமாறு:—

(அ) 1957-58ல் 12800 ரூபாய்களாகவும், 1958-59ல் 13304 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கிய மொத்த அரசிறையுடன் ஒப்பிடுகையில், 1959-60ல் மொத்த அரசிறை 14038 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது.